

வெள்ளக்கோவில் நகரம், உப்புபாளையத்தில் சுமை தூக்குவோர் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் புதிய கட்டிடம் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தன், அவைத்தலைவர் சி.குமரவேல், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர்எம்.எஸ்.மோகன செல்வம் உள்பட மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சுமை தூக்குவோர் தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசின் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் விருதாளரும், கோவை சூலூர் பாவேந்தர் பேரவை நிறுவனருமான புலவர் செந்தலை கவுதமன் மற்றும் பாவேந்தர் பேரவை தேவராஜ் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் திருச்சி பெரியார் மாளிகை வருகை தந்து "தாய் வீட்டில் கலைஞர் மற்றும் இயக்க நூல்களை வாங்கி சிறப்பித்தனர். திருச்சி பெரியார் மாளிகையில் தந்தை பெரியார் பயன்படுத்திய பிரச்சார ஊர்தி (வேன்) முன்பு ஒளிப்படம் எடுத்து மகிழ்ந்தனர். திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் இரா.ஜெயக்குமார், திருச்சி மாவட்ட தலைவர் ஞா. ஆரோக்கியராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# ஈரோடு தெற்கு மாவட்டத்தில் மருத்துவ முகாம்கள்!

### மாவட்டக் கழகச் செயலாளர் சு.முத்துசாமி அறிவிப்பு

ஈரோடு, அக்.21-

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் -அமைச்சர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர பகுதிகள், ஒன்றியங்களில் நந்தா மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்கள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

22.10.2023 ஞாயிற்றுக்கிழமை வீரப்பன் சத்திரம் பகுதியிலும் 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை பெரிய சேமூர் பகுதியிலும், 5.11.2023 ஞாயிற்றுக்கிழமை கோட்டை பகுதியிலும், 19.11.2023 சூரம்பட்டி பகுதியிலும், 23.11.2023 ஞாயிற்றுக்கிழமை பெரியார் நகர் பகுதியிலும், 3.12.2023 ஞாயிற்றுக்கிழமை கொல்லம்பாளையம் பகுதியிலும், 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை கருங்கல் பாளையம் பகுதியிலும் ஆகிய 8 பகுதிகளில் நடைபெறும் மருத்துவ முகாம்கள் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையிலும் பகுதி கழக செயலாளர்கள் வி.சி.நடராஜன், வி.செல்வராஜ், பொ.ராமசந்திரன், வில்லரசம்பட்டி முருகேசன், அக்னி டி.சந்திரசேகர், க.லட்சுமணகுமார், குறிஞ்சி என்.தண்டபாணி ஆகிய பகுதி செயலாளர்கள் முன்னிலையிலும் 17.12.223 ஞாயிற்றுக்கிழமை கொடுமுடி வடக்கு ஒன்றியத்திலும், 24.12.2023 ஞாயிற்றுக்கிழமை கொடுமுடி மேற்கு ஒன்றியத்திலும், 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியத்திலும், 7.1.2024 ஞாயிற்றுக்கிழமை மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியத்திலும், 14.1.2024 ஞாயிற்றுக்கிழமை மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியத்திலும், 22.1.2024 ஞாயிற்றுக்கிழமை சென்னிமலை ஒன்றியத்திலும், 28.1.2024 ஞாயிற்றுக்கிழமை ஈரோடு ஒன்றியத்திலும் , 4.2.2024 ஞாயிற்றுக்கிழமை பெருந்துறை தெற்கு ஒன்றியத்திலும், 11.2.2024 ஞாயிற்றுக்கிழமை பெருந்துறை கிழக்கு ஒன்றியத்திலும், 18.2.2024 ஞாயிற்றுக்கிழமை பெருந்துறை வடக்கு ஒன்றியத்திலும், 25.2.2024 ஞாயிற்றுக்கிழமை ஊத்துக்குளி தெற்கு ஒன்றியத்திலும், 3.3.2024 ஞாயிற்றுக்கிழமை ஊத்துக்குளி வடக்கு ஒன்றியத்திலும், 10.3.2024 ஞாயிற்றுக்கிழமை ஊத்துக்குளி மத்திய ஒன்றியத்திலும் ஒன்றிய கழக செயலாளர்கள் மு.சின்னசாமி, ப.நடராஜன் வி.



கதிர்வேல், சு.குண சேகரன், ஆர்.விஜயகுமார், பி.செங்கோட்டையன் தோப்பு சதாசிவம், கே.பி.சாமி, சி.பெரியசாமி, பி.சின்னசாமி பி.பி.ஈஸ்வரமூர்த்தி, எஸ்.சுப்பிர மணியம், வி.ராஜா ஆகிய ஒன்றிய செயலாளர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்கண்ட நிகழ்ச்சிகளில் அந்தந்த இடங்களில் உள்ள மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி, கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் மருத்துவ முகாம்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள்! – மறைந்த

# பங்காரு அடிகளாரின் ஆன்மிகப் புரட்சி போற்றத்தக்கது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, அக்.21–**

**பங்காரு அடிகளாரின் ஆன்மிகப் புரட்சி போற்றத்தக்கது என்று அவரது மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பங்காரு அடிகளாரின் இறுதி நிகழ்வுகள் அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று அறிவித்துள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார் அவர்கள் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

ஆதிபராசக்தி பீடத்தை நிறுவி, அரை நூற்றாண்டிற்கும் மேலாக மிகச்சிறப்பாக நடத்தி, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு சமூக சேவைகளையும் மக்களுக்கு வழங்கி வந்தார்.

அம்மா என்று பக்தர்களால் அழைக்கப்பட்ட பங்காரு அடிகளார் அவர்கள், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் பெண்களே கருவறைக்குள் சென்று வழிபாடுகள் நடத்தும் புரட்சிகரமான நடைமுறைகளை வழக்கப்படுத்தினார்.

கோயில் கருவறைக்குள் அனைத்துச் சாதியினரும் சென்று அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதற்காக தி.மு.கழகம் பல ஆண்டுகளாகப் போராடி, அதனை நடைமுறைப்படுத்தியும் வரும் நிலையில், அனைத்துப் பெண்களையும் கருவறைக்குள் சென்று அவர்களே பூசை செய்து வழிபடச் செய்த பங்காரு அடிகளார் அவர்களின் ஆன்மிகப் புரட்சி, மிகவும் மதித்துப் போற்றத்தக்கது.

அவரது ஆன்மிக மற்றும் சமூக சேவைகளைப் பாராட்டி கடந்த 2019-ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

கடந்த 2021-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் "நம்மைக் காக்கும் 48" திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக மேல்மருவத்தூர் சென்றிருந்த போது, உடல்நலிவுற்றிருந்த பங்காரு அடிகளார் அவர்களை நேரில் சென்று பார்த்து நலம் விசாரித்து வந்தேன்.

உடல்நலக்குறைவால் சிகிச்சை பெற்று வந்த அடிகளார் அவர்கள் தற்போது மறைவுற்றிருப்பது, அவரது பக்தர்களுக்கு ஒரு பேரிழப்பாகும். பங்காரு அடிகளாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பக்தர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பங்காரு அடிகளார் அவர்களின் சேவைகளைப் போற்றும் வகையில், அரசு மரியாதையுடன் அவரது இறுதி நிகழ்வு நடைபெறும்.

இவ்வாறு தமது இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில்

# நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம்

### மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!

நாமக்கல், அக்.21-

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் நாளை 21.10.2023 சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருச்செங்கோடு, சட்டையம்புதூர் செங்குந்தர் திருமண மண்டபத்தில் தொடங்க உள்ளது.

இது குறித்து நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கையில், பாசிச பா.ஜ.க. அரசு, கடந்த கால அடிமை அ.தி.மு.க. அரசின் உதவியுடன், நம் மாணவர்கள் மீது நீட் தேர்வை திணித்தது. மருத்துவராக வேண்டும் என்ற லட்சியத்துடன் படித்து வந்த நம் மாணவர்களில் 20க்கும் மேற்பட்டோர் இதனால் தங்களின் உயிரை மாய்த்துக் கொண்டனர்.

நம் கழக அரசு அமைந்த பிறகு, நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி பல்வேறு வகையில் ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது. கழக இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில் நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி சமீபத்தில்



தமிழ்நாடு தழுவிய அளவில் மாபெரும் உண்ணாநிலை அறப்போராட்டத்தையும் நடத்தினோம்.

தமிழ்நாட்டு மக்களுக்கான மருத்துவ கட்டமைப்பை காப்பதற்கும், மாநில கல்வி உரிமையை நிலை நிறுத்துவதற்கும், கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நீட் தேர்வு விலக்கு சட்ட மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் உடனடியாக ஒப்புதல் வழங்கிட வலியுறுத்தி வரும் 21ஆம் தேதி "மாபெரும் கையெழுத்து இயக்கத்தை" மக்கள் இயக்கமாக தொடங்குவதற்கும், நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தவும் மாநில இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியதை போன்று "நீட் ஒழிப்பிற்காக பெறப்படும் ஒவ்வொரு கையெழுத்தும், நம் கல்வி உரிமை காப்பதற்கான உயிரெழுத்து" என்பதை உணர்ந்து செயல்படும் வகையில், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுடன் கலந்து கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.


**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

**E-டெண்டர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அழைப்பதற்கான அறிவிப்பு**

**தேசிய அளவிலான போட்டி ஒப்பந்தபுள்ளி**

கலைஞர் 100 1924 - 2023

தே.அ. ஓ. அ. எண். 27/ கோ. அருப்புக்கோட்டை பா..சா.தி / க.சே.அ/ KFW/வஅ 2 / 2023/ நாள். 16 10. 2023 ( E–டெண்டர்)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நடைமுறையின் படி தகுதியுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து (முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்)) தமிழ்நாடு டெண்டர்களில் வெளிப்படைத்தன்மை சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்கு இணங்க – (இரண்டு உறை) – இனம் வாரியாக கீழ் பின்வரும் பணிகளுக்கு E-டெண்டர் அழைக்கப்படுகின்றன.

| வ எண். | திட்டத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த அழைப்பு எண். | பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி உட்பட) | முன்வைப்பு தொகை | ஒப்பந்தப் புள்ளி முன் ஆய்வுக் கூட்டம் | ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்தல் | ஒப்பந்தப் புள்ளி திறப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1. | விருதுநகர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைத்தல் – கழிவு நீர் சேகரிக்கும் அமைப்பு மற்றும் அதன் தொடர்புடைய பணிகள் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் (திட்டப் பணிகள் முடிக்க வேண்டிய காலம் 36 மாதங்கள், சோதனை ஓட்டம் 6 மாதங்கள் மற்றும் பராமரிப்பு பணிகள் 60 மாதங்கள் (5 வருடங்கள்) | ரூ.192.00 கோடி | ரூ. 192.00 இலட்சம் | 16.11.2023 அன்று முற்பகல் 11.00 மணி | 11.12.2023 அன்று பிற்பகல் 03.00 மணிக்குள் | 12.12.2023 அன்று பிற்பகல் 03.30 மணிக்கு |

நிதி : SBM 2.0, KFW மற்றும் CGF

ஒப்பந்தபுள்ளி முன் வைப்புத்தொகை மின்னணு பரிவர்த்தனை முறையில் செலுத்த வேண்டும். மின்னணு பரிவர்த்தனை அறிக்கையின் நகலை தொழில் நுட்ப ஒப்பந்த புள்ளியில் சேர்த்து ஒப்பந்தக்காரர் சமர்ப்பிக்க வேண்டும்

ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் ஆகியவை இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக. மற்ற அனைத்து விவரங்களுக்கும் இணையதளத்தில் 27.10.2023 முதல் பார்வையிடலாம்.

செ.ம.தொ.இ/ 5691 /ஒப்பந்தப்புள்ளி/2023 **தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்** தலைமைப் பொறியாளர் (பொ), த.கு.வ.வாரியம், மதுரை.






நாமக்கல்லில் ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவிற்கு வருகை தர உள்ள சுமார் 80,000 பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

# திருவரங்கம் - அரையப்பட்டியில் மருத்துவ முகாம்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, அக்.21-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அரையப்பட்டி ஊராட்சியில், மருத்துவம் • மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்" மருத்துவ முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 18.10.2023 அன்று துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இம்முகாமில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களும் நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, மருத்துவம் • மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், பல்வேறு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில அரையப்பட்டி ஊராட்சியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்" மருத்துவ முகாம் துவக்கி வைக்கப்பட்டது.

மேலும் ஏழை, எளிய மக்களின் மருத்துவத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு பொதுமக்களின் இல்லத்திற்கே மருந்து மாத்திரைகள் கொண்டு சேர்க்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மருத்துவத்துறைக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், அறந்தாங்கி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.46 கோடி மதிப்பிலான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இம்முகாமில், மருத்துவ வல்லுநர்கள் அடங்கிய சிறப்பு மருத்துவ குழு வினரால் பொதுமக்களுக்கு குழந்தைகள் நலம், பல் மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை, இருதய நோய் சிகிச்சை, நீரிழிவு நோய் கண்டுபிடிப்பு, புற்று நோய், காசநோய், மகப்பேறு மருத்துவம், சித்த மற்றும் இந்திய மருத்துவம், மனநல ஆலோசனை போன்ற துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களால், "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம்" மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இம்மருத்துவ முகாமினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்வதன் மூலம் ஆரம்ப நிலையிலேயே நோய்கள் கண்டறியப்பட்டு, புற்றுநோய் உள்ளிட்ட பெரிய நோய்களுக்கு ஆரம்ப நிலையிலேயே சிகிச்சைகள் அளித்து, விலைமதிப்பற்ற மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன.

எனவே தமிழக அரசால் மேற்கொள்ளப்படும் இது போன்ற மருத்துவத் திட்டங்களை அனைத்துத்தரப்பு மக்கள் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக்கொண்டு நோயற்ற வாழ்வினை வாழ வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இம்முகாமில், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மருத்துவர் நமச்சிவாயம், வட்டார மருத்துவ அலுவலர் ராம்சந்தர், வட்டாட்சியர் பெரியநாயகி, ஊராட்சிமன்றத் தலைவர் மலர்விழி துரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல், பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், எஸ்.ஜோயல், இன்பா,ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, ஜி.பிரதீப்ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தினார்கள். இந்த நேர்காணலில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் மாநில நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



தி.மு.க இளைஞர் அணி கரூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி, நகர, ஒன்றிய, பேரூர்க் கழக தி.மு.க இளைஞர் அணி அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் கழகத் தலைவர்–முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வாழ்த்துக்களுடன், கரூரில் நடைபெற்றது. இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்..ஜோயல், இன்பா ஏ.என்.இரகு, நா.இளையராஜா, ப.அப்துல்மாலிக். கே.இ.பிரகாஷ், க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், பிரதீப்ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரவக்குறிச்சி தொகுதி எம்எல்ஏ ஆர் இளங்கோ, மாவட்ட அவைத்தலைவர் டி ராஜேந்திரன், மேயர் கவிதா கணேசன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சக்திவேல், கரூர் மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ், வாழ்த்துத் தெரிவித்தனர்.